# Abstract

This study tries to identify to what extent a contusive working environment is available for the teachers to carry out their work in a satisfactory level. A mixed-method approach was applied within a framework of a survey research design to study the selected problem. Forty-seven (47) plantation schools were identified in the Gampola Educational Zone, and data was collected using a questionnaire from seventy-nine (79) teachers who are working in these schools. The Judgement sampling method was administered to collect the data. The collected data were analyzed using quantitative and qualitative data analysis techniques.

The study revealed that the school environment was not positively supported in all the necessary aspects of the contusive working environment. Therefore, teachers face several challenges for their professional development. The study also revealed that students' and their parents' interactions are not influences on teachers' job satisfaction positively. But interactions with colleague and administration bodies are influences teachers' job satisfaction in a satisfactory level. This study suggested that the relevant authorities such as the Ministry of Education, Provincial Education, Zonal Education Officers, and members of the School Development Societies need to take several remedial actions to uplift the working environment of the plantations schools to enhance the job satisfaction and at the same time teachers also want to realize that they want to play several professional roles to improve the learning environment plantations schools which are in the backward areas.

Key Words

Job satisfaction, working environment, Plantations schools.

# ஆய்வுச் சுருக்கம்

தொழில் சூழலின் அடிப்படையில் ஆசிரியர்களின் தொழில் திருப்தி நிலைமைகளை அறியும் நோக்கத்தோடு மேற்கொள்ளப்பட்ட இந்த ஆய்வினைக் கற்பதற்காக அளவீட்டு ஆய்வு வடிவத்துடன் கூடிய கலப்பு ஆய்வு அணுகுமுறை பயன்படுத்தப்பட்டது. கம்பளை கல்வி வலய கஷ்டப் பிரதேசத்தில் காணப்படும் 41 தோட்டப் பாடசாலைகளில் பணிபுரியும் 79 ஆசிரியர்கள் நோக்குடை மாதிரி எடுப்புமுறையில் தெரிவு செய்யப்பட்டனர். வினாக்கொத்தினைப் பயன்படுத்தி சேகரிக்கப்பட்ட தரவுகள் அட்டவணைகள் மற்றும் வரைபுகளின் மூலம் பகுப்பாய்வு செய்யப்பட்டன.

பெறப்பட்ட முடிவுகளின்படி பொதுவாக ஆசிரியர்களின் வாண்மை விருத்திக்கு தொழில் சூழல் சாதகமாக அமையவில்லை. பௌதீக தொழில் சூழல், மாணவர் இடைத்தொடர்புச்சூழல், பெற்றோர் இடைத்தொடர்புச் சூழல், போன்றனவற்றில் காணப்பட்ட பல குறைபாடுகள் ஆசிரியர்களின் தொழில் திருப்தியில் சாதகமற்ற ஒரு போக்கினை ஏற்படுத்தியுள்ளன. ஆனால் அதேநேரம் பாடசாலை நிர்வாகச் சூழலும், சகபாடிச் சூழலும் சாதகமான முறையில் அமைந்து இருந்தமையை முடிவுகள் எடுத்துக்காட்டுகின்றன. இப்பாடசாலைகளின் தொழிற்சூழலை மேம்படுத்துவதற்காக கல்வி அமைச்சு, மாகாண கல்வித்திணைக்களம், வலயக் கல்வி அதிகாரிகள், பாடசாலை அபிவிருத்திச் சங்கங்கள் என்பன அதற்கான பரிகார நடவடிக்கைகளை மேற்கொள்ள வேண்டுமென்பதுடன் ஆசிரியர்களும் சூழலுக்கு ஏற்றவகையில் தங்களால் இயன்றளவு கடமைகளைச் நிறைவேற்ற வேண்டுமென இந்த ஆய்வு விதப்புரை செய்கின்றது.

**முதன்மைச்சொற்கள்** : தொழிற்சூழல், தொழில் திருப்தி, தோட்டப்புற பாடசாலைகள்